பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 7 (22—11—68) வெள்ளி ★ வெளியூர் : கார்த்திகை 8 (23—11—68) சனி [இதழ் : 131

முட்டுக்கட்டை நீங்கியது

இரஷ்யாவிலிருந்து 6,000 டிராக்டர்களை இறக்குமதி செய்வதற்குத் தடங்கலாக இருந்துவந்த முட்டுக்கட்டை நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

இவைகளுக்கு ஏற்கனவே லைசென்சு வழங்கப்பட்டிருந்தது. இதை வினியோகித்தல்--விற்பனை சம்பந்தமாக ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை ஆகியவை, புதிய தோர் ஏற்பாடு மூலமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது. விரைவில் இவைகள் இறக்குமதியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் மன எழுச்சியை நிறைவு செய்யும்

இலட்சியம் ஈடேறுவதற்குத் தாங்கிக் கொண்ட அடக்குமுறைகள் ஏராளம்

மக்களவையில் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா -- முரசொலி மாறன் முழக்கம்

புதுடில்லி, நவ. 22—

" தற்போது 'மதராஸ்' என்றுள்ள பெயரை மாற்றி அரசியல் சட்டப்பூர்வமாகவும் தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டும் மசோதாவை, மக்களவையில், உள்துறை இணை அமைச்சர் திரு. வித்யா சரண்சுக்லா நேற்று தாக்கல் செய்தார்.

திரு. முரசொலி மாறன் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், 'இன்று ஒரு புனிதமான நாளாகும்' என்று குறிப்பிட்டார் ; இதற்காகத் தமிழக மக்கள் நடத்திய போராட்டத்தையும், தாங்கிக்கொண்ட அடக்குமுறையையும் குறிப்பிட்ட மாறன், தமிழ்நாட்டுக் காங்கிரசார் இதற்குக் காட்டிவந்த எதிர்ப்பினையும், 'தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி' என்று தமது கட்சிக்குப் பெயர் வைத்துக்கொண்டிருக்கும் காங்கிரசார், மக்கள் விருப்பத்துக்கேற்ப பெயர் மாற்ற விரும்பாமல் எதிர்ப்புக் காட்டிவந்த செயலுக்கு வியப்புத் தெரிவித்தார் ; 'இந்தப் பெயர் மாற்றம், மக்களின் மன எழுச்சியை நிறைவு செய்வதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உரையின் இறுதியில் அவர், 'தமிழ்நாடு நீடூழி வாழ்க' என்று கூறினார்.

மக்களவையில் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா :

அரசு அலட்சியப் போக்கு

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனம்

அவையை ஒத்திவைக்க நேரிட்டதற்கு அமைச்சர் வருத்தம்

புதுடில்லி, நவ 22—

மத்திய உள்துறை அமைச்சர் சவானின் அலட்சியம் காரணமாக, மக்களவையை அரைமணி நேரம் ஒத்திவைக்கவேண்டிய ஒரு நிலைமை இன்று ஏற்பட்டுவிட்டது.

தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான -- சென்னை ராஜ்யம்' என அழைக்கப்பட்டுவந்த பெயரை, 'தமிழ்நாடு' என மாற்றி -- அதை அரசியல் சட்டத்திலும் திருத்தி எழுதப்பட வேண்டும் என்று தமிழகச் சட்டமன்றம் சென்ற ஆண்டு ஜூலையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கேற்ப, நேற்று, பெயர் மாற்றத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்படவிருந்தது ; ஆனால் தாக்கல் செய்யவேண்டிய உள்துறை அமைச்சர் அவையில் இல்லாததனால், துணை அவைத் தலைவர், அவையை ஒத்திவைத்தார்.

"இப்படியொரு நிலைமை ஏற்பட்டதற்கு அரசின் அலட்சியப் போக்கே காரணம்" என்று குறிப்பிட்டு எதிர்க் கட்சி உறுப்பினர் கடுமையாகக் கண்டனம் செய்தனர்.

"இந்த நிலைமை ஏற்பட்டதற்கு தலைமையமைச்சர் அவைக்கு வந்து விளக்கம் தரவேண்டும்" என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

"அவைக்கு வந்திருக்கும் துணை சட்ட அமைச்சர்மூலம் இம்மசோதாவைக் கொண்டுவரலாம்" என்று தி. மு. கழக உறுப்பினர்கள் கூறிய யோசனையை துணை அவைத்தலைவர் நிராகரித்தார் ; விதிகளைச் சுட்டிக்காட்டி, எழுத்துமூலம் துணை சட்ட அமைச்சர் அனுமதி கோரினால் தான் அப்படிச் செய்ய முடியும்' என்றார் ; 'இது ஓர் நல்ல மசோதா ; உறுப்பினர்கள் பொறுமையாக இருக்கவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் அனுமதித்தால், நாங்களே பெயர் மாற்றத் திருத்த மசோதாவைக் கொண்டுவருகிறோம்; நாங்கள்தான் தமிழகத்தின் ஆட்சியில் இன்று இருக்கிறோம் ; இந்தியாவையும்தான் சிறிது நேரம் ஆளுகிறோமே" என்று கழக உறுப்பினர் வெ. கிருட்டினமூர்த்தி மனநெகிழ்வுடன் கூறினார்.

முதன்முதலில், பெயர் மாற்ற மசோதாவை எடுத்துக்கொள்ளப்போவதாக துணை அவைத் தலைவர் அறிவித்ததும் கழக உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர் ; ஆனால் தாக்கல் செய்யவேண்டிய உள்துறை அமைச்சர் அவையில் இல்லையெனத் தெரிந்ததும், அவர்கள், 'வெட்கம், வெட்கம்' என்று குரலெழுப்பினர்.

கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், 'இப்படி ஒரு பெயர் மாற்ற மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதில் அமைச்சருக்கு விருப்பமில்லை என்பதனையே இது காட்டுகிறது ; இது ஒரு கடுமையான செயலாகும் ; இது குறித்து உரிமை மீறல் தீர்மானம் ஒன்று அவையில் கொண்டுவரப்பட வேண்டும்' என்று கூறினர்.

உடனே துணை அவைத் தலைவர், 'அடுத்த நிகழ்ச்சியைத் துவக்கலாம்' என்று கூறிய யோசனையைக் கழக உறுப்பினர்கள் ஏற்க மறுத்ததால், அவையை ஒத்திவைத்துவிட்டார்.

மீண்டும் அவை கூடியதும், துணை உள்துறை அமைச்சர் சுக்லா மசோதாவைத் தாக்கல் செய்து, இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தார் ; மேலும், தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய பெயர் மாற்றக் கோரிக்கை மசோதாவுக்குத் தாம் முழு மதிப்புத் தருவதாகவும், அதையொட்டி இம்மசோதாவைத் தாக்கல் செய்வதாகவும் கூறினர்.

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ராம் சுபாக் சிங்கும், அவையை ஒத்திவைக்க நேரிட்டதற்கு மன்னிப்புக் கோரினர் ; இப்படி நேர்ந்ததற்கு எல்லா அமைச்சர்களும் பொறுப்பேற்பதாகவும், எனவே, அனைவருடைய சார்பிலும் தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும், மீண்டும் இப்படி ஏற்படாமல் இருக்கத் தாம் உறுதி அளிப்பதாகவும் கூறினர்.

சிந்தனையில் ஊடுருவியது

திரு. முரசொலி மாறன் ஆற்றிய உரையாவது :—

" இந்த மசோதா, கட்சி அரசியலின் குறுகிய பிரச்சினைகள் எனும் எல்லைகளையெல்லாம் கடந்ததும், எனது பகுதி மக்கள் ஒவ்வொருவரது சிந்தனையிலும் ஊடுருவி எங்கும் பரவிக் கலந்திருப்பதுமான ஒன்றைப் பற்றியதாகையால், எனது கழகத்தின் சார்பிலும்—தமிழ்நாட்டு மக்கள் சார்பிலும் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்து மசோதாவை வரவேற்கிறேன்.

தமது மொழியின் நீண்ட வரலாற்றினாலும், தமது மொழியின் செழுமிய பாரம்பரியத்தாலும், புனிதமடைந்த ஒரு பெயர் தமது மாநிலத்திற்குத் தரப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள், கடந்த பதினைந்து ஆண்டுகளாக விரும்பி வந்திருக்கின்றனர்.

அன்று நீங்கள் பெற்ற பயன்தான் என்னவோ ?

இந்தச் சந்தர்ப்பத்தில், 'ஒரு தெருவின் பெயரையோ மாநிலத்தின் பெயரையோ ஏன் மாற்றவேண்டும்' என யாரேனும் கேட்கலாம்.

1963 மே மூன்றும் நாள் இதே போன்ற தன்மை கொண்ட ஒரு மசோதா — 'மதரூஸ்' எனும் பெயரைத் 'தமிழ்நாடு' என மாற்ற வேண்டுமென்று திரு. பூபேஷ் குப்தாவால் தாக்கல் செய்யப்பட்ட மசோதா விவாதிக்கப்பட்டபோது, காங்கிரசு உறுப்பினர் திரு. என். எம். லிங்கம் அவர்கள், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சில் குறுக்கிட்டு, 'தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதால் நீங்கள் என்ன இலாபம் அடையப் போகிறீர்கள் ?' என்று கேட்டார் ; அண்ணா அவர்கள் அளித்த பதிலை நான் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன்.

ஆமாம் ; அவர் திருப்பக் கேட்டார்— 'பார்லிமெண்டு'க்கு 'லோக் சபா' எனப் பெயர் மாற்றியதன் மூலம் நீங்கள் என்ன இலாபம் பெற்றீர்கள்? 'கவுன்சில் ஆப் ஸ்டேட்'சுக்கு 'ராஜ்ய சபா' எனப் பெயர் மாற்றியதன் மூலம், நீங்கள் என்ன இலாபம் அடைந்தீர்கள்? 'பிரசிடெண்டு க்குப் பதில் 'இராஷ்டிரபதி' எனப் பெயர் மாற்றியதன் மூலம் நீங்கள் என்ன பயன் கண்டீர்கள் ?' என்று.

இன்றுகூட இது நிலை நிற்கிறது என்றும், யாரேனும் ஐயப்பாடுள்ளவர்கள் இருந்தால் அவர்களுக்கு விடையளிக்கிறதென்றும் நினைக்கிறேன்.

மனப்பூர்வ நிறைவு

பெயரை மாற்றுவதன் மூலம், நாம், ஓர் உணர்வுபூர்வமான திருப்தியடைகிறோம்.

பெயரை மாற்றும் இந்த எண்ணத்திற்குப் பின்னே உணர்வுகள் இருக்கின்றன ! பண்பாடு, மொழி மற்றும் சமூகப் போக்குகளைப் பொறுத்த பல்வேறு மனோதத்துவ அம்சங்கள் இருக்கின்றன !

நாம் இந்த மாற்றத்தை உண்டாக்கும்போது, நமது சிந்தனையில் -- நமது ஆன்மாவில் ஒருவித மாற்றம் உண்டாகிறது !

நாம் திரும்பிப் பார்க்கும்போது, இதற்காக நாங்கள எத்தனை ஆண்டுகள் போராடவேண்டியிருந்தது -- எத்துணைப் பேர் சிறைவாசம் பூண்டனர் -- எப்படிப்பட்ட மனித தியாகம் செய்யப்பட்டது என்பதை எல்லாம் எண்ணி ஆய்ந்து பார்க்கும் போது, கடைசியில், 'மக்கள் வென்றனர்' என்ற உணர்வில் குதூகலமே ஏற்படுகிறது.

'மக்கள் வென்றனர்' என்றால், யாருக்கு எதிராக வென்றனர் ? 'மதரூஸ்' மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றுவதற்குக் குறுக்கே நின்றோர் யார் -- இந்தப் பின்னணியையும் மாற்றத்தையும் அறிந்துகொள்வது நன்மை பயப்பதாகும்.

உள்துறை அமைச்சர் அன்று கூறியது என்ன ?

மாநிலச் சீரமைப்பு மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அப்போதைய உள்துறை அமைச்சர் தம் பேச்சில் ஒன்று சொன்னார் ; என்ன சொன்னார் ? --- 'மதருசுக்குத் தமிழ்நாடு' என்ற மாற்றுப் பெயர் வைக்கப்பட வேண்டுமென ஒரு யோசனை கூறப்பட்டது ; அந்த மாநிலத்தின் சட்டமன்றத்திலேயே இப்பிரச்சினை பரிசீலிக்கப்பட்டது; அது, 'மதருசுக்குத் தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தை விரும்பவில்லை ; எனவே, மதருசையே -- மாநிலத்தின் தற்போதுள்ள பெயரையே நாங்கள் வைத்துக்கொண்டுள்ளோம்' என்று !

கோரிக்கையின் தத்துவத்தை உணரத் தவறிவிட்டனர் !

மாநிலம் எதற்கும் பெயர் மாற்றப்பட வேண்டுமானால், அது, தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத்திலிருந்தே வரவேண்டுமென்பது நெடுகிலும் மத்திய அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. நீங்களெல்லாம் நன்கு அறிந்தபடியே, சட்டமன்றத்தைக் கைக்கொண்டிருந்த தமிழ்நாட்டுக் காங்கிரசு, 'மதரூஸ்' மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றும் நடவடிக்கைகளைத் தடுத்துக் கொண்டே இருந்தது.

மற்ற மாநிலக் காங்கிரசுக் கிளைகளைவிட, மிகவும் வேறுபட்ட மனிதர்களைக் கொண்டது தமிழ்நாட்டுக் காங்கிரசு ! வெள்ளைக்காரன் ஆண்டகாலத்தில்கூட, 'கூட்டு மதரூஸ் கமிட்டி'யை வைத்திருக்கிறார்கள் ; 'ஆந்திரப் பிரதேஷ் காங்கிரசுக் கமிட்டி'யை வைத்திருக்கிறார்கள் ; 'தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கமிட்டி'யை வைத்திருக்கிறார்கள். ஆனால், அதை ஒருபோதும் அவர்கள், 'மதரூஸ் மாகாணக் காங்கிரசுக் கமிட்டி' என அழைத்ததில்லை.

உண்மையில், அந்த ஸ்தாபன ஏற்பாடுகளே, பின்னர் வந்த மாநிலச் சீரமைப்புக்கு முன்னோடியாக இருந்தது.

ஆனால், அதே பெயரை எமது மாநிலத்திற்குத் தரவேண்டி வந்தபோது, அவர்கள் தயங்

(4-ம் பக்கம் பார்க்க)

நாடு முன்னேற்றமடைய கடும் உழைப்புத் தேவை

காந்தியின் தொண்டுள்ளம் அனைவருக்கும் வர வேண்டும்

கல்லூரி மாணவரிடையே கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவுரை

"இந்த நாடு ஏழ்மையால் தவிக்கிறது; வறுமையால் வாடிக்கிடக்கிறது. இந்த நாடு ஏனைய நாடுகளைப் போல் முன்னேற்றமடைய வேண்டுமானுல் கடுமையாக உழைத்தாக வேண்டும். குறைந்தது நாளொன்றுக்கு 12 மணி நேரமாவது வேலை செய்தால்தான் இன்னும் சில ஆண்டுகளுக்குள் இந்த நாட்டை முன்னேற்றமடைந்த நாடாக ஆக்கிக்கொள்ள முடியும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டினுர்.

ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மாணவர்களின் மக்கள் பணி மன்றத்தின் சார்பில், காந்தியடிகளின் நூற்றுண்டு விழா, நவ. 18-ஆம் நாள் கல்லூரி புரவலர் சிக்கய்யா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் பணி மன்றத்திலுள்ள மாணவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதைக் காட்டிலும், தங்களுச்குக் கீழுள்ள துவக்கப்பள்ளிகளின் தேவை என்ன என்று அறிந்து அத் தேவைகளை நிறைவு செய்து தருவதில் அக்கறை காட்டலாம்; அல்லது தங்கள் பள்ளிகளைச் சுற்றியோ, கல்லூரியைச் சுற்றியோ சோலைகளை உருவாக்கலாம்; சோலைகளுக்கு மத்தியில் பள்ளிகள் இருப்பது மிகச் சிறப்பானது.

காந்தியடிகள் மக்களுடைய மனத்தில் எப்படி நீங்கா இடம் பெற்றுர் என்றுல், தமது உழைப்பை--உணர்வை -- உள்ளத்தை மக்களுக்காக ஈந்த காரணத்தால்தான்!

வெளிநாட்டிலிருந்து பலர் இந்த நாட்டிற்கு வந்து மக்களுக்காகக் கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் பெருஞ் சேவை செய்து போயிருக்கிறா்கள்; இனனும் செய்துகொண்டும் இருக்கிறுர்கள்.

ஆனுல் இந்த நாட்டிலிருந்து மக்களுக்குச் சேவை செய்ய ஒரே ஒருவர்தான் தென் ஆப்பிரிக்க நாட்டிற்குச் சென்றுர்; அவர் தான் காந்தியடிகள்.

நமது நாடு ஏழ்மையான நாடு-- அதனுல் ஆர்ப்பாட்டத்தைத் தாங்காது! ஆடம்பரத்தைத் தாங்காது! இதை உணர்ந்து அதன்படி செயல்பட்டவர் காந்தியடிகள்தான்!

மக்கள் நம்மையடைய வேண்டுமென்பதற்காகவே அதனுல் ஏற்படக்கூடிய கொடும் துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்று செயல்பட்டவர் காந்தியடிகள்!

காந்தியடிகளின் நூற்றுண்டு விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில், மக்கள் பணி மன்றத்திலுள்ள மாணவர்கள், அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் 25-ந் தேதிக்குள் காந்தியடிகளின் நூற்றுண்டுவிழாவின் நினைவாக ஏதாவதொரு நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டும்.

காந்தியடிகளின் நூற்றுண்டு விழாக் கொண்டாடும் வேளையில் வள்ளுவரது 2000-வது ஆண்டு விழாவும் வருகிறது.

வள்ளுவர் வகுத்த குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்— காந்தியடிகள்; அதனுல், இரண்டு விழாக்களையும் சேர்ந்தே கொண்டாடுவதில் தவறில்லை."

விழாவுக்கு வந்திருந்தவர்களை கல்லூரியின் முதல்வர் அனந்த பத்மநாபன் வரவேற்றுர்.

பிறகு அமைச்சர் ஈரோட்டிலுள்ள அரகின் சிறுதொழிற் கழகத்தின் சார்பில் நடைபெறும் கருவிப் பட்டறை, மற்றும் மறையாணி, திருகுமறைப் பிரிவு முதலிய தொழிற்கூடங்களைப் பார்வையிட்டார்.

தொழிற்கூடங்களின் நிர்வாக அதிகாரிகளான தருமன், ஏ. ஆர். நாதன் ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர்.

இந்த ஆண்டு ரூ. 10·38 கோடி

வெளிநாட்டுத் தூதுவர்கட்காக இந்தியாவின் செலவு!

புதுடில்லி, நவ. 20—

"1968—69-ம் ஆண்டுக்கு மொத்தம் 98 வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களுக்காகவும், ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்காகவும் ரூ 10·38 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் தெரிவித்தார்.

இந்தச் செலவைச் சுருக்க முயற்சிகள் செய்யப்பட்டுவருவதாகவும், அதே நேரத்தில் உலகின் மற்ற நாடுகள் செய்யும் செலவுகளுடன் ஒப்பிடுகையில் இச்செலவு ஒன்றும் பெரிய தொகையாகாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசமானிய ஒழிப்பு

டெல்லி நடவடிக்கை

புதுடில்லி, நவ. 20—

"முன்னுள் மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் அரசமானியத்தை ஒழிக்கவேண்டும் என்ற அரசின் முடிவைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது"

என்று உள்துறையமைச்சர் சவாண், நாடாளுமன்ற மேலவையில் கூறினுர்.

"இது தொடர்பாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்வதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டுவருகிறது" என்றும் அவர் கூறினுர்.

வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்த இந்தியர்கள்

புதுடில்லி, நவ. 20—

"பிரிட்டன், கானடா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றில் 1967-ல் குடியேறிய இந்தியர்களின் தொகை 32,308"

என்று தலைமையமைச்சர் திருமதி. இந்திராகாந்தி, மக்களவையில் தெரிவித்தார்.

இவர்களில் பிரிட்டனில் 22,637 பேரும், கானடாவில் 5,029 பேரும் அமெரிக்காவில் 4,642 பேரும் உள்ளனர்.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (4)

[எஸ். ஆர்.]

களி--புளி--கம்பளி!

'தலைக்கு உயர்ந்த பிள்ளை' எனக் கேள்விப் பட்டிருக்கிறேம். தந்தையரைவிட நெட்டையான மகன்களைக் கண்டிருக்கிறேம்.

அதுபோலத்தான், தருமபுரி மாவட்டமும்!

சேலம் மாவட்டத்திலிருந்து கோடு போட்டுக் கிழிக்கப்பட்டது என்றுலும், தருமபுரி, 'பிறந்த'கத்தைவிடப் பெரிய இடம்!

1965 அக்டோபரில் பிரிக்கப்பட்டது இம்மாவட்டம். வருடத்தையும் மாதத்தையும் குறிப்பிடுவது, வெறும் புள்ளி விவரத்துக்காக அல்ல -- ஒரு விவரத்தைப் புரிய வைப்பதற்குத்தான்!

'பின்தங்கிய இடம் -- முன்னேற்றம் பெறச் சற்றே சிறப்பான கவனம் தேவை' என்ற காரணத்தையொட்டித்தான் தருமபுரி பிறந்தது. பிரிந்து ஏறக்குறைய 15 மாத காலத்தில், காங்கிரசும், மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்க நேரிட்டது!

"கேட்டார்கள் -- பிரித்துவிட்டோம்" என்ற அரசியல் திருப்தியைத்தான் முன்னுள் ஆளும் கட்சிக்காரர்கள் உணர முடிந்தது -- உணர்த்தவும் செய்தார்கள்.

"உருப்படியான முன்னேற்றத்துக்குக் காங்கிரசுக்காரர்கள் முனைப்புக் காட்டவில்லை" என்று கூறுவதைவிட 'பிரிக்கப்பட்ட மாவட்டத்தின் **பெரும்** பொறுப்பு புதிதாக ஆட்சிக்கு

வந்திருக்கும் கழக அரசுக்கு வந்திருக்கிறது' என்பதுதான் பின்னணி நிலைமை — உணர வேண்டிய உண்மை.

தருமபுரி மாவட்டத்தைப் பற்றி எழுத முயலும் பொதுவான — அல்லது கழகத்துக்கு எதிரான பத்திரிகைப் பிரதிநிதிகளும், இந்த அடிப்படையுடன் அணுகுவார்கள் என்று எதிர்பார்ப்பதில் தவறு ஏதும் இருக்க முடியாது.

தமிழகத்தின் மற்ற மாவட்டங்களைப்போலவே தருமபுரிக்கும் சரித்திரப் பெருமைகள் இருக்கின்றன -- இலக்கியப் பெருமைகள் உண்டு.

ஔவையாரைப் பாராட்டிச் சிறப்பித்த அதியமான் நெடுமான் அஞ்சி ஆண்ட தகடூர்தான், இப்போதைய தருமபுரி! அவன் பெயராலேயே உள்ள அதமன்கோட்டை, தற்போது -- கழக ஆட்சிக்குப் பின்னர் -- உண்மை உருப்பெற்று, 'அதியமான்கோட்டை' என்று வழங்கி வருகிறது.

பல்லவர்கள் -- இராஷ்டிரகூடர்கள் -- சோழர்கள் -- விசயநகர மன்னர்கள் -- பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் -- மற்றும் திப்புவும் ஐதர் அலியும் அந்த நாளில், இந்த மாவட்டத்தின் மண்ணுடன் தங்கள் பெயர்களையும், பெற்ற புகழையும் சேர்த்துக்கொண்டவர்கள் தான்!

எல்லையோர மாவட்டங்களுக்கே உள்ள பேச்சு, நாகரிக -- பண்பாட்டு வழக்குகளின் மாற்றத்தினை இந்த மாவட்டத்திலும் காண முடிகிறது.

ஆந்திரத்துடனும், கன்னடத்துடனும் தருமபுரியின் பெரும் பகுதி இடங்கள், ஒட்டி உறவாடி இருக்கின்றன.

'அள்ளி' -- 'பள்ளி' என்ற விகுதிகளுடன் இருக்கும் ஊர்ப் பெயர்களைக் கேட்கும்போது, தமிழகத்தின் ஒரு எல்லைக்கு வந்திருக்கிறேம் என்பதனை உணர முடிகிறது!

பிரிந்த மாவட்டம் -- ஏற்கனவே 'பின்தங்கிய மாவட்டம்' என்ற அளவில் -- ஏதும் எதிர்பாராத சாதாரண உணர்வில் அங்கு சென்ற எங்களுக்கு மக்களும், அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் காட்டிய பரிவு, மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தந்தது!

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்குமேல் இரட்டிப்பாக, இடங்களையும் திட்டங்களையும் ஆங்காங்கே காட்டி விளக்கியவாறு உடன் வந்த மாவட்ட அதிகாரியின் உதவியாளர்கள், உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான்!

இந்த மாவட்டத்தில் குறிப்பாக எங்களைக் கவர்ந்த மற்றென்று, கட்சி வேறுபாடுகளைக் கடந்து அரசியல் தலைவர்கள் ஆங்காங்கே வந்திருந்து விளக்கங்கள் தந்ததும், கோரிக்கைகள் தெரிவித்ததும்தான்!

'செய்தியாளர்களும் பொதுவானவர்கள்; அரசாங்கமும் பொதுவானது' என்ற அடிப்படை விழிப்புணர்ச்சி அவர்களிடையே இருந்ததைத் தான் இது காட்டுவதாக இருந்தது,

தருமபுரி மாவட்டத்தில் நுழையும்போதே நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத -- ஆனுல் நினைவில் இருக்கும்படியான வரவேற்பினைத் தந்தது, 'ஊத்தங்கரை' என்ற பேரூர்தான்; நிகழ்ச்சியை முன்னின்று நடத்தியவர் ஒரு காங்கிரசு எம்.எல்.ஏ.



செய்தியாளர்களை பெண்ணுகரம் சீரணியினர், மாலை சூட்டி வரவேற்ற காட்சி.

அந்தப் பகுதியின் தேவைகள் என்ன என்பதனை விருந்தோடு விருந்தாக ஒரு தாளில் 'டைப்' செய்தே ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும் வழங்கினுர்கள்.

குடிநீர் வசதி -- மருத்துவ நிலையம் போன்ற தேவைகளுடன், ஊத்தங்கரைப் பகுதி 'துணைத் தாலுகா என்ற நிலையிலிருந்து ஒரு முழுத் தாலுகாவாக உயர்த்தப்பட வேண்டும்' என்பதும், 'அதிகப் பஞ்சாயத்துக் கிராமங்களைக் கொண்டிருப்பதால், ஊத்தங்கரை ஒன்றியத்தினை இரண்டாகப் பிரிப்பது, நிர்வாக நிதி ஒதுக்கீடுகளுக்குப் பயன்தரக்கூடியது' என்பதும் குறிப்பிடத்தக்க தேவைகளாகும்.

★

'தருமபுரி மாவட்டத்துக்கே உரிய சிறப்பு' என்று எங்களுக்குப் பின்னுல் தெரியவந்த பழவகைகளை ருசி பார்க்கத் தந்துவிட்டு, பத்திரிகைக்காரர்களின் கேள்விகளுக்கு, 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது'போல் பதிலளித்துப் பேசினுர் --- ஆட்சியாளர் திரு. சுலைமான்.

சுற்றி வளைக்காமல், உள்ளதை நேராக -- தெளிவாக அவர் சொல்லிய பாங்கு, சிறப்புமிக்கது.

"கனரகத் தொழிற்சாலைகள் ஏதாவது உங்கள் மாவட்டத்தில்....?"

என்று கேட்பதற்கு முன்னரே,

"இல்லை; ஏதும் இல்லை; இனிமேல் தான் வரவேண்டும்; அடுத்த ஆண்டு ரூ. 220 இலட்சம் மதிப்பில் ஒரு சர்க்கரை ஆலை இயங்க இருக்கிறது"

எனப் பதிலளிக்கிறுர்.

(3-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவைக் கைப்பற்ற செஞ்சீன முயற்சி

ஜெர்மன் பேராசிரியர் கருத்து

இரஷ்யாவின் நோக்கம் பற்றியும் விளக்கம்

சென்னை, நவ. 20—

"செஞ்சீன, இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் இந்தியாவை கபளீகரம் செய்ய விரும்புகின்றன.

"உலகப் புரட்சி, கொரில்லாப் போர் முறை இவற்றின் மூலம் இந்தியாவைப் பிடிக்க செஞ்சீன விருப்புகிறது.

"சமாதானப் புருக்கள், பொருளாதார உதவி, நட்புறவு என்ற போர்வை ஆகியவற்றைக் கொண்டு படிப்படியாக இந்தியாவைக் கைப்பற்ற இரஷ்யா எண்ணுகிறது"

என்று பேராசிரியர் ஒல்ப் காங் லியான் ஹார்ட் சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

இப்பேராசிரியர் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர்; கடந்த இருபது ஆண்டுகளாகக் கம்யூனிசம் பற்றி அரசியல் விமரிசனம் செய்து வருபவர்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறியிருப்பதாவது:—

"இந்தியாவைப் பொறுத்த வரையில், செஞ்சீனவின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது சீனக் கம்யூனிசத்தின் அபாயத்தை இந்தியர்கள் புரிந்து கொள்வது எளிது.

"சோவியத் யூனியன் போக்கு இதற்கு மாறுனது; இந்தியாவில் தன்னுடைய செல்வாக்கை அதிகாரபூர்வமான வழிகளில் பெருக்கிக் கொள்வதில் இரஷ்யா அக்கறை கொண்டுள்ளது. அரசியல் --- பொருளாதார --- இராணுவ --- கலாச்சார வழிகளே இவை!

"பெயரளவில் மட்டும் கூட்டுச் சேராத நாடாகவும், உண்மையில் இரஷ்ய ஆதிக்க மண்டலத்திற்குள் நெருக்கமாகச் செல்லும் நாடாகவும் இந்தியா ஆகும் வரையில், இரஷ்யா தனது செல்வாக்கை அதிகப்படுத்திக் கொண்டே போக விரும்பும்."

சான்றுடன் யூகிக்க இடமில்லை

புதுடில்லி, நவ. 20—

மாநிலங்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், உள்துறை அமைச்சர் சவான் கூறியதாவது:—

"கடந்த பொதுத் தேர்தலில் எந்த அரசியல் கட்சியும், வெளிநாட்டுப் பணம் பெற்றதாகச் சான்றுடன் யூகிப்பதற்கு இடமில்லை.

"அந்நியநாட்டுப் பணம் பயன்படுத்தப்பட்டதா 'என்பதை ஆராய்ந்து புலனய்வுத் துறை அளித்த அறிக்கை, அரசின் பரிசீலனையில் இருக்கிறது; விவரங்கள் முழுவதும் கிடைத்தவுடன், அவை, மன்றத்தில் வைக்கப்படும்."

மண்ணெண்ணெய் பஞ்சம் தீரும்

டெல்லி அமைச்சர் தரும் நம்பிக்கை

புதுடில்லி, நவ. 22—

சென்னை எண்ணெய் துப்புரவு ஆலை, அடுத்த பிப்ரவரியில் இயங்கத் துவங்கியதும், மண்ணெண்ணெய் பற்றுக்குறை நீங்கிவிடும்.

ஹால்டியா துப்புரவு ஆலை இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில் இயங்கத் துவங்கியதும், மண்ணெண்ணெயில் தன்னிறைவு பெறுவோம்" என இரசாயனத் துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

பரிசுச் சீட்டு மூலம் கிடைக்கும் வருமானம்

மக்கள் மீது வரிப் பளு அதிகரிக்காமல் இருக்க வழிகோலும்

தூத்துக்குடி, நவ. 22—

"வளர்ச்சித் திட்டங்களுக்கு வரி விதிப்பு அவசியமாகிறது; ஆனல், வரிப் பளு அதிகமுள்ள மக்கன் மீது மேலும் வரி விதிக்காமல் இருக்கவே, பரிசுச் சீட்டுகளிலிருந்து கிடைக்கும் பணம் செலவழிக்கப்படும்; பொதுச் சுகாதாரத்திற்கு இதில் 5¼ சதவிகிதம் செலவிடப்படும்"

என்று, தமிழகச் சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா கூறினர்.

தூத்துக்குடியில் ரூ. 5 84,000 செலவில் கட்டப்படவிருக்கும் இரண்டாவது தண்ணீர் தொட்டிக்கு (நகரின் வட பகுதிக்கு) அவர் அடிக்கல் நாட்டினர்.

'தலைமைச் செயலகச் செய்திக் கதிர்'

தமிழக அரசு வெளியிடும்

சென்னை, நவ. 22—

தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றுபவர்களுக்கென 'தலைமைச் செயலகச் செய்திக் கதிர்' என்ற பெயரில் ஓர் இதழினை நடத்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

மூன்று திங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இந்த இதழை, அரசாங்கச் செய்தித் துறை வெளியிடும்.

அரசுத் தலைமைச் செயலாளர் இவ்விதழின் ஆசிரியர் குழுத் தலைவராகவும் பதிப்பாசிரியராகவும் இருப்பார்.

செய்தித்துறை இயக்குநர் பொறுப்பையும் வகிக்கும் பொதுத் துறைத் துணைச் செயலாளர், மொழிப்பெயர்ப்புத் துறை இயக்குநர், தலைமைச் செயலகச் சங்கத் தலைவர், தலைமைச் செயலக அரசிதழ் பதிவு அலுவலர் சங்கத் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

சென்னையில் உள்ள அரசாங்கத் தகவல் நிலைய அலுவலர் இவ்விதழுக்குத் துணையாசிரியராக இருப்பார்.

தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், ஏனைய ஊழியர்கள் சம்பந்தப்பட்ட செய்திகள், பிறப்பு, திருமணம், கலைத்துறைச் சாதனைகள், விளையாட்டுத்துறைச் சாதனைகள் முதலியன அதில் இடம் பெறும்.

நிர்வாகத்தில் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு யோசனைகள் கூறும் கட்டுரைகள், ஊழியர் நலம் சம்பந்தப்பட்ட அரசு ஆணைத் தொகுப்புரைகள், அலுவலர்கள், பணியாளர் எழுதும் கதை,--கட்டுரை--கவிதை--அரசு தலைமைச் செயலாளர் எழுதும் ஆசிரியர் குறிப்பு முதலியன இவ்விதழின் சிறப்பு அம்சங்களாக விளங்கும்.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அனைவருக்கும் இவ்விதழ் இலவசமாக வழங்கப்படும்.

சென்னை முதல் வட்ட கருணாநிதி நற்பணி மன்றம்

சென்னை முதல் வட்டத்தில் 17—11—68 அன்று வட்டச் செயலாளர் கே. அரசு தலைமையில் 'கலைஞர் குறளகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 'கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றம்' அமைக்கப்பட்டு, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: என். எஸ் இராசு (கலைஞர் குறளகம்); செயலாளர்: இரா. விசயரத்தினம்; துணைச் செயலாளர்: பா. கமலநாதன்; பொருளாளர்: கு. மதிவாணன்; செயற்குழு உறுப்பினர்கள்: துரைக்கண்ணு, பாலகிருட்டிணன், பாஸ்கரன், வீரப்பன், சம்பத், சுந்தரம், இரா. மதிவாணன், பா. புஷ்பலிங்கம், வேணு, நாகூரான், கிருட்டிணன், விசுவநாதன், பி. எஸ். மணி.

நாகர்கோவில் இடைத்தேர்தல்

புதுடில்லி, நவ. 21—

நாகர்கோவில் தொகுதி நாடாளுமன்ற இடைத் தேர்தலுக்கான நாள் குறிப்பிடப்பட்டுவிட்டது.

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் டிச. 12; பரிசீலிச்கும் நாள் டிச. 13; திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் டிச. 16; போட்டி இருக்குமானல் சன. 8-ஆம் நாள் வாக்குப் பதிவு நடைபெறும்.

தேசிய வருமானம்

தலைமையமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 21—

"1966—67-ல் தேசிய வருமான உயர்வு மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஒரு சதவிகிதம் குறைந்தது; 1967—68-ல் 9.1 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது; 1968—69-ம் ஆண்டுக்கான மதிப்பீடு இன்னும் கிடைக்கவில்லை"

என்ற தகவலை தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் தெரிவித்தார்.

தெ. கி. ஆசியாவில் பீகிங்கின் வாலாட்டம்

ஒடுக்க மலேசியா உறுதி

கோலாலம்பூர், நவ. 21—

"தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சனநாயகத்தை அழிப்பதற்குப் பீகிங்கின் தலைமையில் வேலை செய்து வரும் சக்திகளை எப்பாடுபட்டாவது ஒழித்துக் கட்ட உறுதி கொண்டிருக்கிறேன்"

என்று மலேசியாத் தலைமையமைச்சர் துங்கு அப்துர் ரகிமான் கூறினர். அவர் மேலும் விளக்கியதாவது:—

"இராணுவ பலத்தையும், ஆக்கிரமிப்புக்களையுமே கம்யூனிஸ்டுச் சீன நம்பியிருக்கிறது; நேரடியாகவோ மறைமுகமாகவோ தென்கிழக்கு ஆசிய நாடுகளைத் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்துவிட வேண்டும் என்று சீன விரும்புகிறது.

அவர்களுடைய கொள்கைகள் எப்போதுமே சிறிய நாடுகளுக்குப் பேராபத்தாய் இருந்து வந்திருக்கிறது"

கடலுக்குக்கீழ் ஊர்கள் அமைக்க ஆழ்கடல் ஆராய்ச்சி

புதிதாக உருவாக்கப்பட்ட கருவிகளின் துணையுடன், ஒரு மைலுக்கு மேல் ஆழமுள்ள கடல் படுகைகளை அமெரிக்கக் கடல் ஆராய்ச்சியாளர்கள் நேரடியாக ஆராய்ந்துள்ளனர்.

கடல் படுகையில் வருங்காலத்தில் நிலையான ஆராய்ச்சி நிலையங்களும், பொறியியல் நிலையங்களும் ஏற்படுத்த மேற்சொன்ன திட்டம் வழிகோலக்கூடும்.

கடல் வண்டல்களிலுள்ள இயற்கைப் பொருட்கள்பற்றி ஆராய்வதில் ஒரு புதிய முறை, தற்போது நடைபெற்ற சோதனைகளாகும்.

கடல் படுகையிலிருந்து 10-அடி ஆழம்வரை நேரடியாக மண்ணை அகழ்ந்தெடுத்து, இயற்கைப் பொருட்களை ஆராய்வதும் இதில் அடங்கும்.

கடலை ஆராயவும், கடல் மடியிலுள்ள செல்வங்களை அகழ்ந்தெடுக்கவும் மனிதன் பயன்படுத்தக்கூடிய ஆழ்கடல் ஊர்கள் அமைக்கத் திட்டமிடுவதில், கடல் படுகை அடி மண்களின் இயல்புகள் பற்றி அறிவது அவசியமாகிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஏன் இந்த நிலை?" என்று கேட்ட எங்களுக்கு, மாவட்டத்தின் மொத்த நிலையை மூன்று வார்த்தைகளில் சுருக்கிக் காட்டினர் திரு. சுலைமான்.

"இது மிகவும் பின்தங்கிய மாவட்டம்; மக்கள் சற்று பழைமைப் பிடிப்புள்ளவர்கள்; இயற்கை சாதகமும் தேவையான அளவுக்கு இல்லை; இந்த மாவட்டத்தை மூடியிருப்பது களி—புளி—கம்பளிதான்!"

விளக்கம் கேட்ட எங்களுக்குத் தெரியவந்த உண்மை இதுதான்!

தருமபுரியின் பெரும் பகுதியில் விளைவது புளியும் ராகியும்தான்! மக்கள் மேய்ப்பது ஆடுகளை! இந்த மூன்றின் அடிப்படையில்தான் பெரும்பாலோரின் வாழ்க்கை நிலை அமைந்திருக்கிறது! ஆட்சியாளர் கூறிய 'களி -- புளி -- கம்பளி' கதையை, பின்னல் சென்ற இடங்களில் பார்த்தும் கேட்டும், 'சரிதான்' எனத் தெரிந்து கொண்டோம்!

நீர்ப்பாசனம் இல்லாத பகுதிகளில்தான் 'களி -- புளி -- கம்பளி' என்ற நிலை பொருந்துமே தவிர, 'கே. ஆர். பி.' என அனைவரும் பொதுவாக அழைக்கும் கிருஷ்ணகிரி ரிசர்வாயர் புராஜக்ட், பரூர் ஏரி, படதலவ் ஏரி, பெனுகொண்டபுரம் ஏரி. மற்றும் வட்டார அலுவல் உள்ள 2045 சிறிய நீர்ப்பாசன வசதிகளைக் கொண்ட பகுதிகளில் பயிர் வளம் சிறந்து காணப்படுகிறது.

நீர் வளமில்லாத பகுதிகளின் நிலையினை, 'களி -- புளி -- கம்பளி' என விவரித்தால், பாசன வசதிமிக்க மேற்கண்ட வட்டாரங்களை, 'கனி -- காடு -- காட்சி' என விவரிக்கலாம்.

மாவட்டத்தின் பெரும் பகுதி, கடல் மட்டத்துக்கு 2,000 அடி உயரத்தில்தான் இருக்கிறது; மலைகளும், அதனைச் சார்ந்த காட்டு வளங்களும், கண்களையும் கருத்தையும் கவருகின்றன!

கிருஷ்ணகிரியில் உள்ள மாதிரி காய் -- கனி ஆராய்ச்சிப் பண்ணையையும், அந்தப் பகுதியிலேயே உள்ள மற்றொரு தனியார் துறை பழப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையினையும் தவிர, இந்த மாவட்டத்தின் கனி வகைகள் முழு அளவு பயன்படுத்தப்படவில்லை என்றே தோன்றுகிறது.

'டெலிஷியோ' என்ற தனியார் நிறுவனத்தினரை விசாரித்துப் பார்த்ததில் மட்டும் சின்னஞ் சிறு வசதிகளைக் கொண்டு அங்கு உற்பத்தியாகும் பழங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'ஜாம்'கள் ஆப்பிரிக்க நாடுகளுக்கும், மற்ற இடங்களுக்கும் அனுப்பப்படுவதாகவும், ஆண்டொன்றுக்கு மூன்று இலட்ச ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணியினை மட்டும் அது பெற்றுத் தருவதாகவும் தெரியவந்தது.

ஏற்கனவே அங்கு இயங்கிவந்த இதுபோன்ற ஒரு நிறுவனம், சிக்கல்கள் சிலவற்றின் காரணமாக மூடப்பட்டுவிட்டதாகச் சிலர் கூறினர்.

"வளமுடைய பகுதிகளில் கிடைக்கும் பழச் செல்வங்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்தித் துறையில் ஈடுபட இம்மாவட்டத்தில் இன்னும் இதுபோன்ற தொழில் நிலையங்கள் ஏற்பட இயலும்; ஆனல், முதலீடு செய்வதற்குத்தான் எவரும் அக்கறை காட்டுவதில்லை" என்று மாவட்ட ஆட்சியாளர், வேதனையுடன் கூறினர்.

அவரது இலாகாவினரின் கண்காணிப்பில் உள்ள அரசினர் மாதிரி பழ -- காய்கறிப் பண்ணையினை, மக்கள் இன்னும் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

★

'இளைத்த பிள்ளைக்கு இரட்டைப் பங்கு தர வேண்டும்' என்பார்கள். பின்தங்கிய நிலையில் பிரிவினைக்கும் ஆளாகியுள்ள தருமபுரி சிறப்பான கண்காணிப்பினைப் பெறவில்லையேல், 'பிரிந்தும் பயனில்லை' என்ற அவலத்துக்கு ஆளாகிவிடக்கூடும்!

மாவட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாகச் செய்தியாளர்கள், பெண்ணகரத்தில் சீரணியினரால் கட்டி முடிக்கப்பட்ட பெண்கள் பள்ளிக்கு அழைக்கப்பட்டிருந்தனர் ('சுற்றுலா' வினையொட்டி, சீரணி பற்றிய தனிக் கட்டுரை, இத்தொடரின் இறுதியில் வெளியிடப்படும்); கழகத்தின் முன்னள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கரிவேங்கடம், வட்டாரக் காங்கிரசுப் பிரமுகர்கள், மற்றும் அதிகாரிகள் அனைவரையும் முந்திக் கொண்டு அங்கே சீரணியின்னர், செய்தியாளர் ஒவ்வொருவரையும் மலர்மாலையிட்டு வரவேற்றனர். அவர்களால் கட்டி முடிக்கப்பட்டிருந்த பள்ளிக் கட்டிடத்தில் நடந்த கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளும், மாவட்ட அதிகாரிகளும் தெரிவித்த இரண்டு கருத்துக்கள் தனிக் கவனத்திற்கு உரியனவாக இருந்தன:—

(1) மாநில அரசுக்கு மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சித் துறைகள் மூலம் செலுத்தப்படும் வரிப் பங்கிட்டில், சலுகைகள் காட்டப்படல் வேண்டும்.

(2) தொழில், விவசாய உற்பத்திக்கு இன்றியமையாத் தேவையான மின்சாரம் வழங்குவதில், மின்சார வாரியம் கோரும் காப்புத் தொகை போன்ற கட்டணங்களின் மதிப்பு கணிசமாகக் குறைய வேண்டும்.

அவர்களுடைய இந்த இரண்டு கோரிக்கைகளும், கொள்கையளவில் மாநில அரசால் ஆராயப்பட்டு, மாற்றங்கள் செய்யப்படுவதற்கு உரியனவாகும் என்பதில் சந்தேகமில்லை; கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முக்கிய ஒன்றுரும்; அந்த மாவட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் -- இதுபற்றி ஒருமித்த கருத்துடன் சட்டமன்றத்தில் கோரிக்கைகள் கொண்டுவருவதுதான் பரிகாரம் கிடைப்பதற்கு வழிவகுக்கும்.

தமிழகத்தில் வியக்கத்தக்க அளவுக்கு முன்னேறியுள்ள கோவை போன்ற மாவட்டங்களைப் போலவே, 'பின்தங்கிய நிலையில் பிரிக்கப்பட்டிருக்கும் தருமபுரியும் விகிதாச்சார அளவில் தனது பங்கினை மாநில அரசுக்குச் செலுத்தவேண்டும்' என்ற நியதியினை, 'ஒரு சில ஆண்டுகளுக்காவது தளர்த்த வேண்டும்' என்ற விண்ணப்பத்தினை, பெண்ணகரத்தில் நடந்த அந்தக் கடைசி நிகழ்ச்சியின்போது பல்வேறு தரப்பினரும் திரும்பத் திரும்ப வலியுறுத்தினர்.

தருமபுரி மாவட்டத்தில் கண்டவைகளையும் கேட்டவைகளையும் வைத்து செய்தியாளர்கள் உணர்ந்த உண்மையும் இதுவாகவே இருந்தது.

['எரியும் பாறை -- ரொமிய இங்கிலாந்து' என்ற தலைப்பில், இதே மாவட்டம் பற்றி நாளை மற்றுமோர் கட்டுரை இடம் பெறுகிறது.]

மக்களவையில் முரசொலி மாறன் பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கினர் ; அநேகமாக மக்கள் கோரிக்கையின் தத்துவத்தை (நியாயத்தை) அங்கீகரிக்கத் துணிச்சலில்லாத அளவுக்கு அவர்கள் 'குருடர்'களாக இருந்தனர்! அந்த நடத்தை போதுமான அளவுக்குச் சோக மயமானதாக இருந்தது !

அப்படித்தான் செய்வது எனத் தீர்மானித்துக்கொண்டவர்கள் போல், செயலாலும் சிந்தையாலும் அவர்கள் மீண்டும் பெருந் தவறு இழைத்தார்கள் !

அவர்கள் எவ்வளவு தவறான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்தனர் ? — 'வெறுமனே 'மதருசிலிருந்து தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றுவதன் மூலம் நீங்கள் என்ன பயன டைந்துவிடப் போகிறீர்கள் ?' என அவர்கள் கேட்டனர் !

விரைந்து மாற்றினர் -- மனமுவந்து வரவேற்ரும்

ஆனல் அதே கட்சிதான், அன்ருெரு நாள், சென்னையில் 'சைனு பஜார்' எனும் பெயரை, 'நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை' என மாற்றிற்று—நாங்கள் அதை வரவேற்ரேம் !

சீரங்கப்பட்டினம் களத்தில் இந்தியப் புரட்சிவாதியான திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டதைக் கொண்டாடுமுகத்தான் 'பேங்க்வெட்டிங் ஹால்' எனும் ஒரு மண்டபத்தை கிளைவ் பிரபு கட்டினன். அதை, 'இராஜாஜி மண்டபம்' என அவர்கள் விரைந்து மாற்றினர்கள் ; இது ஒரு தேசபக்தச் செயல் ; நாங்களும் அதை வரவேற்ரேம்.

தங்கள் அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டனர் !

எதிர்க் கட்சியினர் எடுத்துக் கூறி -- அவர்களால் முன் வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை என்பதால், 'தமிழ் நாடு' என்று பெயர் மாற்றம் ஏற் படுத்த மறுத்தார்கள் !

தமிழர்கள் வெட்கப்படும்படியாக, 'தமிழ்நாடு எனும் பெயர் இலக்கியத்தில் இல்லை' என்று சொல்லி அவர்கள், தம் தமிழ் இலக்கிய அறியாமையை அம்பலப்படுத்திக் கொண்டார்கள் !

" வரலாற்றுப் பூர்வமாக வங்காளம் இருந்ததுண்டு ; கேரளம் இருந்ததுண்டு ; ஆனல், வரலாற்றுப் பூர்வமாகத் தமிழ் நாடு இருந்ததில்லை " என்று சொன்னர் ஒருவர் -- தமிழ் நாட்டுக் காங்கிரசின் பிரதிநிதியாக அன்று மாநிலங்களவையிலிருந்த திரு. டி. எஸ். பட்டாபிராமன்தான் அவர் !

விசித்திர வகையினர் !

" இந்தப் பெயர், 'மதராஸ்' என்பதிலிருந்து 'தமிழ் நாடு' என மாற்றப்படுவதை நாங்கள் விரும்பவில்லை ; ஏனெனில், 'தமிழ்நாடு' என்பதைவிட 'மதருஸ்' என்பதன் மூலம் நாங்கள் நன்கு அறியப்பட்டிருக்கிறேம் " —ஆமாம் ; அவர்களுக்கு இதையெல்லாம் சொல்லத் துணிச்சலிருந்திருக்கிறது ! ஏனெனில், தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்கள் ஒரு விநோதமான வகையினர் !

'குசராத்' என்றும், 'மகாராட்டிரம்' என்றும் மாநிலங்கள் அமைந்தபோது, அம்மாநிலங்களில் எந்த ஒரு காங்கிரசுக்காரரும் அவற்றின் பெயர்களுக்கு மறுப்புரைக்க முன்வரவில்லை !

மக்கள் வேட்கையை மதித்தார் நேரு !

பொட்டி சீராமுலு என்ற தேச பக்தர் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகின்ற மனேநிலையில், சாகும்வரை உண்ணுநோன்பை மேற்கொண்டபோது, ஆந்திரத்து மக்கள் -- காங்கிரசார் உட்பட -- ஒரு மனிதனென எழுந்து நின்றனர் ! நம் காலத்து மாபெரும் சனநாயகவாதியாம் நேரு அந்த மக்களின் வேட்கையை மதித்தார் !

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், மொழிவழி மாநிலங்களுக்கான கோரிக்கை மேலும் தீவிரமடைந்தது என்பதை நாமறிவோம்.

மேற்கு வங்காளத்தில் வைத்திய நாத் பவுமிக் என்பாரும், சிக்கந்தர் விகாசதாஸ் என்பாரும் உண்ணுநோன்பை மேற்கொண்டனர் ; அப்போதைய மேற்கு வங்க முதலமைச்சரே நேரடியாகத் தலையிட்டதன் பேரில் 25-ம் நாள் உண்ணுநோன்பை அவர்கள் கைவிட்டனர்.

இலட்சியத்திற்கு உயிர்துறந்தவர் ஏளனத்துக்குரியவரானர்

இதேபோன்ற நிகழ்ச்சி ஒன்று இங்கே நடைபெற்றபோது தமிழ்நாடு காங்கிரசின் எண்ணமும் கருத்தும் எதுவாக இருந்தது ? தேசபக்தரும் சுதந்தரப் போராட்ட வீரருமான ஒரு தமிழர்--அவர் பெயர் சங்கரலிங்க நாடார், 'சென்னைக்குத் தமிழ் நாடு எனப் பெயரிடவேண்டும்' என்ற இலட்சியத்திற்காகச் சாகும்வரை உண்ணுநோன்பை மேற்கொண்டபோது, மேற்கு வங்க முதலமைச்சரைப் போல தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சர் தலையிடவில்லை ; தாம் வழக்கமாகக் கூறுகின்றபடி, 'ஆகட்டும்--பார்க்கலாம்' என்றுகூட அவர் அப்போது சொல்லவில்லை !

எழுபத்தெட்டு நாட்கள் உண்ணுநோன்பிலிருந்து தம் கடைசி மூச்சை சங்கரலிங்கனர் விட்டபோது, உள்ளமற்ற தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கமிட்டிக்காரர்கள், அனுதாபத்துக்கேனும் ஒரு சொல்கூடக் கூறவில்லை ! அது மட்டுமல்ல சங்கரலிங்கனரை ஏளனத்துக் குரியவராக--கேலிக் குரியவராக ஆக்கிடவும் அவர்கள் முனைந்தனா !

தமிழ்நாடு காங்கிரசின் சார்பில் அப்போது மாநிலங்களவையில் இருந்த உறுப்பினர் ஜி. இராசகோபாலன் பேச்சை இங்கு மேற்கோள் காட்டிட விரும்புகிறேன் :—

" உண்ணுநோன்புகள் பல நடந்ததுண்டு ; ஒரு நபர் உண்ணுநோன்பு இருந்து உயிரையும் விட்டார். அதற்குப் பின்னும் நாங்கள் தேர்தலில் ஜெயித்தோம் ; 'சென்னை என்ற பெயர் இருக்கிறபடி இருக்கட்டும்' என்று மக்கள் சொல்லிவிட்டனர்."

இராசகோபாலனுக்கு, 'உயிர்த் தியாகம் செய்தவர் யாரோ—எவரோ ஒரு நபர்' என்ற அளவில்தான் பட்டுள்ளது !

காங்கிரசின் ஆணவம் அத்தகையதாக இருந்தது !

அண்ணு அவர்கள் மாநிலங்களவையில் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், மற்ருெரு காங்கிரசு உறுப்பினர் டி. எஸ். பட்டாபிராமன் குறுக்கிட்டு, 'காங்கிரசுக் கட்சியானது தேர்தலுக்குத் தேர்தல் பெரும்பான்மை பெறுவதென்பது, நிரந்தரமாக இருக்கப் போகிற ஒரு நிலை' என்ருர் ; மேலும்—வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல், 'வேண்டுமானல், உங்களுக்கும் காங்கிரசுக் கட்சியில் இடம் ஒதுக்கித்தர தயாராக இருக்கிரேம்' என்று அண்ணு அவர்களைப் பார்த்துச் சொன்னர்.

காங்கிரசாரத இறுமாப்பும், ஆணவமும், அகந்தையும் அத்தகையதாக இருந்தது. தங்களுக்கு மிருக பலப் பெரும்பான்மை இருந்த நேரத்தில் தேச பக்தர்களத வெந்த உள்ளங்களில் வேலைப் பாய்ச்சினர். அதிகாரச் சிறைக்குள் சிக்கிய கைதிகளாக இருந்தனர்.

'தமிழ்நாடு' என்பதை மாநிலத்துக்குள்ளேயும், தமிழ் மொழியிலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அவர்கள் அனுமதித்த இரண்டாம் கட்டம் வந்தது ; ஆனல், அரசியல் சட்டம் திருத்தப்படுவதற்கு அவர்கள் மறுப்புக் கூறினர்களே -- ஏன் ?

விசித்திரமான வாதங்களை அவர்கள் எடுத்துரைத்தனர் : 'மதருஸ்' என்ற பெயரை மாற்றினல், சர்வதேச ஒப்பந்தங்கள் விஷயத்தில் சங்கடங்கள் ஏற்படும்' என்ருர் --- அப்போது தமிழ் நாட்டுத் தொழிலமைச்சராகவும் இப்போது திட்டக் குழு உறுப்பினராகவும் இருக்கின்ற ஆர். வெங்கட்ராமன் !

பழைய பெயர்கள் மறைந்ததால் வந்த வினைகள் என்ன ?

'கோல்டு கோஸ்ட்' என்றிருந்த (ஆப்பிரிக்க நாடு) பெயர், 'கான' என்று மாற்றப்பட்டதே -- என்ன ஆயிற்று ?

பழைய காலனி ஆதிக்க எசமானர்கள் இட்ட பழைய பெயர்களை உடைத்தெறிந்து விட்டு புதிய பெயர்களைத் தாங்கிக் கொண்டு புதிய சுதந்தர நாடுகள் ஒவ்வொரு நாளும் ஐ.நா. அவையின் உறுப்பினர் நாடுகளாக ஆவதைக் காண்கிரேம் --- அவர்கள் என்ன சங்கடங்களைக் கண்டுவிட்டார்கள் ?

நாம் விரும்புவதெல்லாம், ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றவே ஆகும். மாற்றினல் சர்வதேச ஒப்பந்தங்களில் சங்கடங்கள் வந்துவிடுமென்ற சிறுபிள்ளை வாதம், புகழ் பெற்ற ஒருவரிடமிருந்தா வர வேண்டும் ?

தமிழ்நாட்டுக் காங்கிரசார் முரண்பாட்டுக் கோளாறு எனும் நோயினல் பிடிக்கப்பட்டிருக்கிருர்கள் ; இல்லையென்ருல், எப்படி அவர்கள் தங்களது நிலையை விளக்க முடியும் ?

பெயரைத் திரும்பப் பெற பதினைந்தாண்டுகள் ஆயிற்று

தங்களது சரித்திரபூர்வமான பெயரைத் திரும்பப் பெற தமிழ் நாட்டு மக்களுக்குப் பதினைந்தாண்டுக் காலம் ஆயிற்று !

காங்கிரசைப் படுதோல்வியடையச் செய்து, தி. மு. கழக உறுப்பினர்களையும் அவர்களது தோழமைக் கட்சியினரையும் பெருவாரியான எண்ணிக்கையில் தமிழக மக்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பிய பின்னரே இது சாத்தியமாயிற்று !

தேவையில்லாதபோது அந்த நல்லெண்ணம் கிடைத்தது

1967 சூலை 18-ம் நாள் அண்ணு அவர்கள் தீர்மானத்தை முன் மொழிந்தபோது சட்டமன்றத்தினர் அனைவரும் எழுந்து நின்று ஆரவாரம் செய்தனர் ; ஒரு முறை இருமுறை அல்ல -- மும்முறை ஆரவாரித்து வரவேற்றனர் !

'இனி எதிர்க்கவே முடியாது' என்று தெரிந்ததும், தமிழ்நாடு காங்கிரசு அதை ஆதரிப்பதல்லாமல், வேருென்றும் செய்ய முடியவில்லை ! தேவை இல்லாதிருந்தபோதே அவர்களது நல்லெண்ணம் எங்களுக்குக் கிடைத்தது !

பதினைந்தாண்டுகளுக்குமுன் இந்த நல்லெண்ணம் காட்டப்பட்டிருக்குமானல், ஓர் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் ; அவர்களுக்கும் நல்ல பெயர் கிடைத்திருக்கும்.

பல நேரங்களில் -- பலமுறை இந்த நல்லெண்ணம் மறுக்கப் பட்டதால், இன்று அவர்கள் ஆதரித்த நேரத்திலும் மக்களால் அவர்களது ஆதரவை நம்ப இயலவில்லை.

உள்ளத்தின் அடிதளத்திலிருந்து எழும் நன்றியுணர்வு

தமிழ்நாடு காங்கிரசின் போக்கை அவர்கள் எத்தனைக் கண்டித்தாலும், அரசியல் சட்டத் திருத்தத்துக்கு வகை செய்து மசோதா நிறைவேறிட வசதி செய்தளித்த இந்த அரசுக்குத் தமிழகத்து மக்கள் நன்றி கூறுகிருர்கள். தங்கள் உள்ளங்களின் அடித்தளத்திலிருந்து நன்றியைத் தெரிவிக்கிருர்கள்.

மாபெரும் தேசபக்தர் சங்கரலிங்க நாடாருக்கு மிகுந்த மரியாதையுடன் எனது அஞ்சலியைச் செலுத்தி, இந்தச் சட்டம் ஒருமனதாக நிறைவேறிட துணைபுரியும்படி என் நண்பர்களை வேண்டிக் கொள்கிற இந்நேரத்தில், சகோதர மாநிலங்களைச் சேர்ந்தோரிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற நல்லாதரவினைக் கண்டு தமிழ் மக்கள் எத்தனை மகிழ்ச்சியடைந்திருக்கிருர்களென்பதை, நான் சொல்லவும் வேண்டுமோ ?"

பம்பாய் தி.மு.க.

தலைமைக் குழுக் கூட்டம்

" பம்பாய் தி. மு. க. தலைமைக் குழுக் கூட்டம் 24—11—68 பிற்பகல் 3-மணிக்கு மாதுங்கா போதார் கல்லூரியில் நடைபெறும் ; கிளைக் கழகச் செயலாளர்களும், தலைமைக் குழு உறுப்பினர்களும் தவருது கலந்துகொள்ள விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

" ஆய்வுக்கு வரும் பொருள் : மாநகராட்சிமன்றத் தேர்தல் நிதி வரவு–செலவு ; 1967 பொதுத் தேர்தல் நிதி வரவு–செலவு ; முன்னுள் நிர்வாக வரவு–செலவு ; கிளைக் கழகத் தேர்தல்கள் "

என்று தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன் அறிவிக்கிருர்.

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

நவ. 23 காலை 10 மணி : திண்டிவனம்—எண்ணெய் வித்துக்கள் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொள்ளல் ; 11 மணி : சிந்தாமணி—நீர் இறைக்கும் கருவிகள் வழங்குதல் ; சீரணியினரால் கட்டப்படும் உயர் தொடக்கப் பள்ளி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல் ; பகல் 12-30 மணி : விழுப்புரம்—நகராட்சித் துவக்கப் பள்ளி கட்டிடத் திறப்பு விழா : பகல் 2-30 மணி : விழுப்புரம்—அரசினர் கலைக் கல்லூரியில் சமூக நலக் குழு துவக்க விழா ; மாலை 3-30 மணி : கெடார்—நில அடமான வங்கியின் கடன் பத்திரங்கள் வழங்குதல் ; 5 மணி : அன்னியூர்—பட்டா வழங்குதல் ; இரவு 7 மணி : சங்கீதமங்கலம்—பட்டா வழங்குதல்.

சிந்தாமணி சீரணியினர் பள்ளிக் கட்டிடப் பணி

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி துவக்கிவைப்பார்

23—11—68 காலை 11 மணிக்கு விக்கிரவாண்டி வட்டாரம் சிந்தாமணியில், சீரணியினரால் கட்டப் படவிருக்கும் பள்ளிக் கட்டிட வேலைத் துவக்க விழாவை, அமைச்சர் ஏ. கோவிந்தசாமி துவக்கிவைப்பார் ; தலைவர் : எல். எம். மெனிசெஸ் ; பேசுவோர் : எம். விசுவநாதன் பி.ஏ., டி.ஏ. கிருட்டினசாமி பி.ஏ.

விழாவில், விக்கிரவாண்டி வட்டார விவசாயிகளுக்குக் கடனுக ஆயில் எஞ்சின்களும், மின்சார மோட்டார்கள் -- பம்பு செட்டுகளும், கூட்டுறவு நில அடமான வங்கியிலிருந்து கடனும், அமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

கிராம மக்கள் தங்களுடைய கிராமத்திற்கு வேண்டிய பொது நலனைப் பெறுவதற்குக் கோரிக்கை அடங்கிய தனித்தனி விண்ணப்பங்கள் எழுதி அமைச்சரிடம் தருமாறு சீரணித் தலைவர் டாக்டர் கோ. செயராமன் கேட்டுக்கொள்கிருர்.

அறிஞர் அண்ணு-ஆந்திர முதல்வர் சந்திப்பு

சென்னை, நவ. 22—

முதலமைச்சர் அண்ணு அவர்களை, ஆந்திர முதலமைச்சர் கே. பிரும்மானந்த ரெட்டி அவர்கள் நேற்று சந்தித்து உடல்நலம் பற்றி விசாரித்தறிந்தார்.

'முதல் தேசிய பாங்கி'யின் தலைவரும் அண்ணு அவர்களைச் சந்தித்துப் பேசினர்.

நடக்க இருப்பவை

23--11--68

சேலம் 20-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; கார்பெட் பகுதி நேர் சாலையில் ; தலைவர் : எம். பெரியசாமி ; பேசுவோர் : அ. அண்ணுமலை, ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., கி. செயராமன் எம்.எல்.ஏ., சி. பழனியப்பன் எம்.சி., சிற்றுளி ஏ. சுப்பிரமணியம், பி. இராசமாணிக்கம், கே. துரைசாமி, மற்றும் பலர்.

24--11--68

மதுரை

மதுரை முத்து படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு ; சாத்தமங்கலம் முந்திரி நகரில் ; தலைவர் : எஸ். வெங்கடாசலம் ; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., சொ. காவேரி மணியம் பி.எஸ்சி.,பி.எல்., டாக்டர் அம்பலம், வா. கோ. காவேரி, மற்றும் பலர்.

செங்கம்

தி. மு. க. சார்பில் இரவு 7-30 மணிக்கு ; தளவநாய்க்கன்பேட்டையில் ; தலைவர் : ஆர். பரசுராமன் ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், ப. உ. சண்முகம் எம்.எல்.சி., எஸ். முருகையன் எம்.எல்.ஏ., ஆர். முத்து எம்.பி., சி. கே. சின்னராசு எம்.எல்.ஏ., பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ., கே. வி. குப்புசாமி, து. கண்ணன், தொ. கோவிந்தசாமி, கு. கிருட்டினன், செ. அரங்கனுதன், அ. ந. அரங்கனுதன், சி. சின்னராசு, சி. இராமலிங்கம், பி. அப்துல் காதர், சு கணேசன், மற்றும் பலர்.

நெய்வேலி -- புதுநகர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; திரு. வி. க. திடலில் ; தலைவர் : கு. பால்ராசு ; பேசுவோர் : துரை முருகன் பி.ஏ. பி.எல்., தோப்பூர் திருவேங்கடம், திருப்பூர் துரைசாமி எம்.எல்.ஏ., எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., கணபதி ராமசுப்பையா எம்.ஏ., பி. வி. சீனிவாசன், எஸ். ஆண்டகுருநாதன், ஆறுமுகம், எஸ். அமீது, ஆர். குப்புசாமி, எஸ். கே. சங்கரலிங்கம்.

குழுக் கூட்டங்கள்

" சிவகங்கை வட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 24-11-68 பிற்பகல் 1-மணியளவில் நடைபெறும் ; உறுப்பினர்கள் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் " என வட்டச் செயலாளர் பெரி. மா. இளமதி அறிவிக்கிருர்.

கோவை — கணேசபுரம்

" கோவை நகர 5-வது வட்டார தி. மு க. பொது உறுப்பினர் கூட்டம் 24—11—68 இரவு 8-மணிக்கு கிளைக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும் ; உறுப்பினர்கள் தவருது வருகை தர வேண்டுகிறேன் " என, துணைச் செயலாளர் சி. கிருஷ்ணன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.